செய்தி வெளியீடு எண் : 1998 நாள் : 04.10.2023

செய்தி வெளியீடு

**புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவது தொடர்பாக தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம்**

தேசிய மருத்துவ ஆணையம் (National Medical Commission) சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பினால், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (4–10–2023) கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், இத்தகைய கட்டுப்பாடு விதிப்பதன் மூலம், எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் புதிய மருத்துவமனைகளும், புதிய முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பு முற்றிலுமாக இல்லாமல் போய்விடும் என்று குறிப்பிட்டு, தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென்றும், இதுதொடர்பாக மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவுரைகளை ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு வழங்கிட வேண்டுமென்றும் தனது கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

- - - - - -

**Text of the D.O. Letter of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to Thiru. Narendra Modi, Hon'ble Prime Minister requesting to instruct the Union Ministry of Health and Family Welfare to keep the notification issued by the National Medical Commission (NMC) in abeyance**

I wish to draw your kind attention to the regressive scenario created by the recent notification issued by the National Medical Commission (NMC) to restrict the opening of new medical colleges. It has been notified by the NMC that after academic year 2023-2024, the Letter of Permission for starting new medical colleges shall be issued only for an annual intake capacity of 50/100/150 seats, provided that the medical college shall follow the ratio of 100 MBBS seats for 10 lakh population in

that State / U.T. This is a direct encroachment on the rights of all State Governments and penalization of States who have invested more in their public health infrastructure over the years.

Progressive states like Tamil Nadu have been strengthening their tertiary healthcare network for many decades. This has led to ample availability of doctors and nurses, which has manifested in their better performance in terms of various health indicators. Chennai has emerged as the healthcare capital of India. In both public and private sectors, our skilled medical professionals have been able to successfully serve not only the people of Tamil Nadu but also of other states as well as other nations. This has generated huge demand for quality health services and new institutions are absolutely necessary for us to cater to it in the future.

The criterion proposed for such restriction, higher doctor-population ratio at the State level as compared to the norms, is also not appropriate. Even when there is adequate availability of doctors at the state level, there are districts where their availability continues to be a persistent issue. This problem can be effectively addressed only by opening of new medical colleges in such backward areas. Any restriction on new medical colleges based on state level criteria will deprive these deserving districts of much needed tertiary institutions.

I would also like to point out the fact that in states like Tamil Nadu which have higher doctor-population ratio, such high availability of doctors has been achieved predominantly due to investments made by State Governments and private sector and not by investments made by Union Government. We have been continuously urging that the Union Government needs to contribute more but projects like AIIMS, Madurai are yet to take-off. Given this situation, a restriction on new institutions will completely eliminate any chance of Tamil Nadu getting new investments in health sector by the Union Government in future.

In its recent judgement (Civil Appeal No. 6681 of 2002), the Hon’ble Supreme Court has also held that executive instructions could not impose reasonable restrictions on the fundamental right to establish educational institutions under Article 19(1)(g) of the Constitution of India. Thus the above NMC notification may also be legally untenable. Considering all the above issues, I request you to instruct the Union Ministry of Health and Family Welfare to keep this notification in abeyance and initiate a consultative process with the State Governments on the steps to address this issue.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in